மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

ஒருங்கிணைந்த தொழிற்பூங்கா

***13086—திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் ஒருங்கிணைந்த தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் ஒருங்கிணைந்த தொழிற் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் இதயங்களில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். கோவை மாவட்டம், தொழில் துறையில் முதன்மையான மாவட்டம்; தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும் நிறைந்திருக்கின்ற மாவட்டம். அப்படி இருந்தாலும்கூட, கடந்த காலங்களில் இயங்கிவந்த பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்கு மூடப்பட்ட நிலையிலே இருக்கின்றன. குறிப்பாக* South India Viscose Limited*–ல் 10,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வந்தார்கள். இன்றைக்கு அவர்களுக்கு வேலை இல்லாத ஒரு சூழ்நிலை உள்ளது. திறமையான தொழிலாளர்களில் பலபேர் தொழில்*

2017 ஜூலை 4]

முனைவோர்களாகக்கூட இப்போது உருவாகியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அந்தத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெறத்தக்க வகையிலும், தொழில் முனைவோர்களாக இன்றைக்கு உருவெடுத்திருக்கின்ற அவர்கள் தொழில் தொடங்குகின்ற வகையிலும், இவை ஒருசேர அமைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் கோவை வடக்கு தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள், ஒருங்கிணைந்த தொழிற்பூங்காவினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதில் என்னுடைய கருத்தையும் ஒன்றாக இணைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அரசின் வசம் இல்லை. இருந்தாலும், கோயம்புத்தூரிலிருந்து 73 கி.மீ. தூரத்தில் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் 1,859 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் வளாகம் அமைந்துள்ளது. அதில் அனைத்து வசதிகளும் இருக்கின்றன.

முற்பகல் 11–10

தற்சமயம் 1,727 ஏக்கரில் 243 தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு, மிகச் சிறப்பாக அங்கிருக்கும் தொழிலாளர்களையும் உள்ளடக்கி, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி, தொழில்முனைவோர்கள் இருந்தாலும், பெருந்தொழில்கள் செய்வதற்கும், நடுத்தரத் தொழில்கள் செய்வதற்கும் ஏற்றவாறு மேற்படி இடம் இருக்கின்றது. தற்சமயம் ஒதுக்கப்பட்ட இடம்போக, 132 ஏக்கர் நிலம் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் இருக்கின்றது, கோயம்புத்தூர் மாவட்ட மக்களும் அங்கு வந்து பயன் பெறுகின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கோரிக்கையை நான் கொண்டு வருகிறேன். விருதுநகர்–சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில், எங்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, சென்ற முறை உங்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, சிப்காட் மூலமாக தொழிற்பூங்கா அமைப்பதற்காக ஏறத்தாழ 2,000 ஏக்கர் நிலம் எடுப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? அதை விரைவுபடுத்தக்கூடிய எண்ணம் அரசிற்கு இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 9 மாவட்டங்கள், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களை உள்ளடக்கி, தொழில் வளாகங்கள் சிறக்க வேண்டுமென்று இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 19,118 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டுமென்று திட்டம் வரையறுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும். ஏற்கெனவே,* Madurai–Thoothukudi Industrial Corridor *அமைத்திருக்கிறோம். அதற்காக 10 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர் முடிந்த பின்னர் உடனடியாக மேற்படி திட்டத்தின்மீது கவனம் செலுத்தி அந்தத் திட்டம் மேலும் வளர்வதற்குண்டான வழிவகைகளை அரசு கடைப்பிடிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*